முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1586

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.02.2024**, வியாழக்கிழமை

1. உயர் ஞானம் உலகோர்க்கு தந்தருள
   உலகத்தில் ஆறுமுகன் என் அவதாரமாகவே
   தயவே வடிவாக வந்த மாதவசியே
   தர்மனே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் தை மாதம் 18 ம் நாள், 01.02.2024, வியாழக்கிழமை)
   ஆசியதும் சோபகிருது கலைதிங்கள்
   அரங்கன் உமக்கு சக்தி கூட உரைப்பேன்
3. வாசிவென்ற ஞானியர் படையெல்லாம்
   வலம் வந்து உன் தடத்தை அலங்கரித்துவர
   வருகவே ஆறுமுகன் யான் நீ வசிக்கும் அறையில்
   ஆற்றல்பட மகா சக்தியாக சூட்சுமமாக இருந்து வருகின்றேன்
4. வருகவே அரங்கன் நீ வழங்குகின்ற தர்மத்தின் மூலம்
   வையகம் எங்கும் தர்ம சக்தியாக நிரம்பி இனிதே
   பெருமைமிக்க அரங்கன் உன் தர்மசாலைகளை
   பேராற்றல்மிக்க கிளைகளை எல்லாம் ஞான சக்திகொண்டு இனிதே
5. ஞானவான்களை ஆங்காங்கே உருவாக்கி
   ஞானி உன் அவதாரமான உலகமாற்றம் சடுதி நிகழ அருள்புரிகின்றேன்
   புரியவே அகிலத்தில் ஜீவதயவு கொண்ட
   பெரும்கூட்டங்கள் உருவாகி இனிதே
6. துரிதகதி உலக மாற்றம் தேசிகன் உன் ஆசியோடும்
   தெரிவிப்பேன் தண்டாயுதன் யான் வெளிப்பட இனிதே
   உலகத்தில் அற்புதம் நடக்கக்கூடும்
   ஆற்றல்பட அரங்கனை நாடி உலகோர் அனுகூலம்பெற தேடி வந்தால் போதும்

7. போதுமப்பா உலகமாற்றம் சடுதி காணும்
புண்ணியவான்கள் நிறைந்த ஞானபூமியாக
பூதலமெங்கிலும் ஞான ஆட்சியும்
புகழ்மிக்க ஞான சித்தர்காலமுமாக கனியநேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—